செ.வெ.எண் : 21/ ஏப்ரல் நாள் : 21.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

# கொரோனா சிகிச்சைக்காக போதிய ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் வெண்டிலேட்டர் கருவிகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று (21.04.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

குறிப்பாக, இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகம் அருகே உள்ள சோதனைச்சாவடி, பர்வதம் தெரு, தனுஷ்கோடி செல்லும் சாலையில் நடராஜபுரம் அருகே உள்ள சோதனைச்சாவடி ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 377 நபர்கள் (Active Cases) வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில் 114 நபர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மீதமுள்ள நபர்கள் அவரவர் சொந்த வீடுகளில் தனிமைபடுத்தப்பட்டு உரிய மருத்துவ சிக்ச்சை மற்றும் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 4 கல்லூரிகள், தனியார் ஆஸ்பத்திரிகள், அரசு ஆஸ்பத்திரிகள் என 21 மையங்களில் 1,369 படுக்கைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சூழ்நிலைக்கு ஏற்ப இதனை அதிகரித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கொரோனா சிகிச்சைக்காக போதிய ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் வெண்டிலேட்டர் கருவிகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசு ஞாயிற்றுக்கிழமை பொது ஊரடங்கு மற்றும் பிற நாட்களில் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடு நடவடிக்கைகளை முறையே நடைமுறைபடுத்திடவும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்திடவும் மாவட்டத்தில் மொத்தம் 27 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முககவசம் அணியாமல் இருத்தல், சமூக இடைவெளி பின்பற்றாமல் இருத்தல் போன்ற காரணத்திற்காக மார்ச்-1 ஆம் தேதி முதல் இதுவரை ரூ.33 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பொற்கொடி, நகராட்சி ஆணையாளர் திரு.ராமர், வட்டாட்சியர்கள் திரு.மார்ட்டின், திரு.அப்துல் ஜபார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**